சுருக்கம்

பள்ளிக் கல்வி– 2006–07 மற்றும் 2007–08ஆம் கல்வியாண்டுகளில் தரம் உயர்த்தப்பட்ட அரசு நகராட்சி மற்றும் மாநகராட்சி உயர்நிலை / மேல்நிலைப் பள்ளிகளுக்கு அனுமதிக்கப்பட்ட பட்டதாரி மற்றும் முதுகலை பட்டதாரி ஆசிரியர் 730 தற்காலிகப் பணியிடங்கள்– 01.07.2014 முதல் 30.06.2015 வரை ஓராண்டிற்கு மட்டும் தொடர் நீட்டிப்பு வழங்குதல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

பள்ளிக் கல்வித் [பக5(1)]துறை.

அரசாணை (1டி) எண். 280 நாள்: 30.12.2014

( திருவள்ளுவராண்டு 2045, மார்கழி 15)

படிக்கப்பட்டவை:–

1. அரசாணை(நிலை) எண். 97, பள்ளிக் கல்வித்(இ1) துறை, நாள் 26.06.2006.
2. அரசாணை(நிலை) எண்.151, பள்ளிக் கல்வித்(இ1) துறை, நாள் 29.08.2006.
3. அரசாணை(நிலை) எண்.106, பள்ளிக் கல்வித்(இ1) துறை, நாள் 09.05.2007.
4. அரசாணை(நிலை) எண்.176, பள்ளிக் கல்வித்(இ1) துறை, நாள் 20.07.2007.
5. அரசாணை(நிலை) எண்.95, பள்ளிக் கல்வித்(மேநிக.2) துறை, நாள் 24.04.2007.
6. அரசாணை(நிலை) எண்.177, பள்ளிக் கல்வித்(மேநிக.2) துறை, நாள் 20.07.2007.
7. அரசாணை(நிலை) எண்.361, பள்ளிக் கல்வித்(இ1) துறை, நாள் 06.11.2007.
8. அரசாணை (1டி )எண்.245, பள்ளிக் கல்வித்(இ1) துறை, நாள் 05.09.2011.
9. பள்ளிக் கல்வி இயக்குநரின் கடித ந.க.எண். 047065/எல்/ இ3/2014 நாள் 16.7.2014.

----

ஆணை :–

மேலே 1 முதல் 7 வரை உள்ள அரசாணைகளின்படி, 2006 –2007 மற்றும் 2007–2008–ம் கல்வியாண்டுகளில் தரம் உயர்த்தப்பட்ட அரசு, நகராட்சி மற்றும் மாநகராட்சி உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளுக்கு அனுமதிக்கப்பட்ட 230 பட்டதாரி ஆசிரியர் மற்றும் 500 முதுகலை பட்டதாரி ஆசிரியர் (மொத்தம் 730) தற்காலிக பணியிடங்களுக்கு கடைசியாக, மேலே 8–ல் படிக்கப்பட்ட அரசாணையில் 01.07.2011 முதல் 30.06.2014 வரை தொடர் நீட்டிப்பு செய்து ஆணை வழங்கப்பட்டுள்ளது.

2. மேலே 9–ல் படிக்கப்பட்ட கடிதத்தில், மேற்குறிப்பிட்டுள்ள 230 பட்டதாரி ஆசிரியர் மற்றும் 500 முதுகலை ஆசிரியர் தற்காலிகப் பணியிடங்கள் சேர்த்து, மொத்தம் 730 தற்காலிகப் பணியிடங்களுக்கு திருத்தப்பட்ட ஊதிய விகிதம் பட்டதாரி ஆசிரியர் பணியிடத்திற்கு ரூ.9300–34800 + தர ஊதியம் ரூ.4600 எனவும், முதுகலை ஆசிரியர் பணியிடத்திற்கு ரூ.9300–34800 + தர ஊதியம் ரூ.4800 எனவும் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது எனவும், இப்பணியிடங்களுக்கு 01.07.2014 முதல் மேலும் 5 ஆண்டுகளுக்கு தொடர் நீட்டிப்பு செய்து ஆணை வெளியிடுமாறு பள்ளிக் கல்வி இயக்குநர் கோரியுள்ளார்.

3. மேலே பத்தி 2ல் உள்ள பள்ளிக் கல்வி இயக்குநரின் கருத்துருவினை பரிசீலித்து, 2006–2007 மற்றும் 2007–2008–ம் கல்வியாண்டுகளில் தரம் உயர்த்தப்பட்ட அரசு, நகராட்சி மற்றும் மாநகராட்சி உயர்நிலை மற்றும் மேல்நிலைப்பள்ளிகளுக்கு அனுமதிக்கப்பட்ட 230 பட்டதாரி ஆசிரியர் (ஊதிய விகிதம் ரூ.9300–34800 + தர ஊதியம் ரூ.4600) மற்றும் 500 முதுகலை பட்டதாரி ஆசிரியர் பணியிடங்கள் (ஊதிய விகிதம் ரூ.9300–34800 + தர ஊதியம் ரூ.4800) ஆக மொத்தம் 730 தற்காலிக ஆசிரியர் பணியிடங்களுக்கு 01.07.2014 முதல் 30.06.2015 வரை அல்லது தற்காலிக பணியிடங்களுக்கான தொடர்நீட்டிப்பு குறித்த நிதித்துறையின் மறு ஆய்வில் முடிவெடுக்கும் வரை, இதில் எது முந்தையதோ அதுவரை தொடர் நீட்டிப்பு வழங்கி அரசு ஆணையிடுகிறது.

4. இப்பணியிடங்களுக்கான செலவினம் கீழ்கண்ட கணக்குத் தலைப்பின் கீழ் பற்றுவைக்கப்பட வேண்டும்:-

<u>அரசுப் பள்ளிகளுக்கான கணக்குத் தலைப்பு</u>

> " 2202 – பொதுக்கல்வி – 02 இடைநிலைக் கல்வி 109 அரசு இடைநிலைப் பள்ளிகள் –I – திட்டத்தில் சேராதது – AA அரசு இடைநிலை மற்றும் மேல்நிலைப்பள்ளி ஆசிரியர் மற்றும் பணியாளர்களின் சம்பளம் – 01 சம்பளங்கள்.
> (த.தொ.கு.2202–02–109 AA 0108)"

<u>நகராட்சி/மாநகராட்சி பள்ளிகளுக்கான கணக்குத் தலைப்பு</u>

> " 2202 – பொதுக்கல்வி – 02 இடைநிலைக் கல்வி 109 அரசு இடைநிலைப் பள்ளிகள்– I – திட்டத்தில் சேராதது – AB நகராட்சி மற்றும் மாநகராட்சி இடைநிலை / மேல்நிலைப்பள்ளி ஆசிரியர்களுக்குச் சம்பளங்கள் –01 சம்பளங்கள்.
> (த.தொ.கு.2202–02–109 AB 0106)" .

5. மேலே பத்தி 3–ல் தெரிவிக்கப்பட்டுள்ள பணியிடங்களில் பணியாற்றும் பணியாளர்கள் அப்பணியிடங்களுக்குரிய ஊதிய விகிதம், அகவிலைப்படி மற்றும் இதரப் படிகளையும் பெறத் தகுதி உடையவர்களாவர்.

6. இவ்வாணை நிதித் துறை அ.சா.எண்.65976/கல்வி II/2014, நாள் 24.12.2014– ல் பெற்ற இசைவுடன் வெளியிடப்படுகிறது.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**த.சபிதா**
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்
பள்ளிக் கல்வி இயக்குநர், சென்னை–6
மாநில கணக்காயர், சென்னை–18
கருவூலக் கணக்கு ஆணையர், சென்னை–15.

சம்பந்தப்பட்ட சம்பளக் கணக்கு அலுவலர்கள்.
சம்பந்தப்பட்ட கருவூல அலுவலர்கள்.
சார் சம்பளக் கணக்கு அலுவலர்,
சென்னை மாநகராட்சி, சென்னை –3.

**நகல்:**

நிதித் (கல்வி–II) / (வரவு செலவு I & II) துறை, சென்னை–9
திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை, சென்னை–9
பள்ளிக் கல்வித் (அநமு) துறை, சென்னை–9.
இருப்புக்கோப்பு.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

30/12/14
பிரிவு அலுவலர்

ந.க.எண் 047655/அ4/இ3/2014 நாள் 31.12.2014

நகல் - அனுப்பப்படுகிறது.

பெறுநர்

Director of School Education
Chennai - 600 006.

31/12/2014

அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்கள்
மற்றும் மாவட்டக் கல்வி அலுவலர்கள்.